**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.2/2023**

**2026 ஆம்** வருடம் மார்ச் மாதம் 23 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வள்ளியம்மாள் | ஜாதி | : | |
| க.பெ | : | நஞ்சப்பிள்ளை | தொழில் | : | 100 நாள் வேலை |
| கிராமம் | : | அக்கரைப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 75/2026 |
| தேதி | : | 23.03.2026 | | | |

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு **விசாரணை**

நீங்களும் வழக்கை தாக்கல் செய்துள்ள நாச்சிமுத்துவும் ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரிதான். நீங்களும் நாச்சி முத்துவும் வட்டித் தொழில் செய்கீறீர்கள் என்றால் சரியல்ல. சாட்சி தானாக முன்வந்து நான் படிக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். உங்களிடம் காட்டப்படும் இவ்வழக்கின் கடனுறுதி சீட்டை யார் எழுதியது என்று உங்களுக்குத் தெரியுமா என்றால் தெரியாது. உங்களிடம் காட்டப்படும் கடனுறுதி சீட்டை வாதியிடம் கொடுக்கும் போது யார் யார் இருந்தார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் கடனுறுதி சீட்டை கொடுக்கும் போது வேறு யாரும் உடன் இருந்தார்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். நான் மட்டும் தான் இருந்தேன். இந்த வழக்கில் வாதி நாச்சி முத்து கேட்டுக் கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு தொகையை எந்த தேதியில் கொடுத்தார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் நான் படிக்கவில்லை என்பதால் தேதி தெரியவில்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் பணம் கொடுத்த தேதி குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

**Sd/-Thiru. S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor